செங்கற்பட்டு மாவட்டம் கிழக்கரை சாலை.

*333 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கரை சாலைக்கு 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் செல்லும் கிழக்கரை சாலைக்காகச் செலவழிக்கப்பட் டிருக்கிற பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) கிழக்குக் கடற்கரையோரச் சாலைக்காக 1967–68-ம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 2,83,272·50 செலவழிக்கப்பட்டது.

(இ) மதுராந்தகம் துணைக் கோட்டத்தில் மட்டும் ரூ. 1,82,785 செலவிடப்பட்டது. வட்ட வாரியான கணக்குகளை வைத்து வராததால், மதுராந்தகம் வட்டத்தில் செலவிட்டது பற்றிய தனிப்பட்ட கணக்குகளைக் கொடுக்க இயலவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தற்போது போடப்பட்டுள்ள கிழக் கடற்கரைச் சாலை கடற்கரையின் பக்கத்தில் போடப்பட்டிருப்பதாலும், புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் போக்குவரத்து அதிகமாகப் போக முடியவில்லை. உடனடியாக அதற்கு மெட்டல் போட்டு தார் ரோடாக்கும் அளவுக்குச் செயற் குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மெரினா கடற்கரையை அழகுபடுத்தல்.

*334 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் எதும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். ரூபாய் 75 இலட்சத்துக்கு மேற்பட்ட மதிப்பீட்டுச் செலவில் மெரினா கடற்கரையை விரிவான அடிப்படையில் மேம்படுத்த வேண்டும் என்று இயற்கைக் காட்சி செயல்படுத்துக்குழு பரிவுரை செய்தது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகும் செலவு மிக அதிகம் என்று கருதப்பட்டதால், இப்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பூங்காக்கள் அமைக்கப்பட்டு, அலங்கார வகைச் செடிகள் வளர்க்கப்பட்டு தற்போது கிடைக்கிற நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் இன்னும் சிறிது அதிக நிதி ஒதுக்கத்தைக் கொண்டு மெரினா கடற்கரையை எழில்படுத்துவதற்கு ஆவன செய்யும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். குடிசைகளை மெரினா கடற்கரையிலிருந்து அகற்றவும், கட்டுமரங்களையும் மீன் பிடி வலைகளையும் ஒழுங்காக விட்டு வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. கே. விநாயகம் : மெரினா கடற்கரையின் ஒரு பகுதியில் "லவர்ஸ் பார்க்" என்று இருக்கிறது. அதிலே மற்றவர்கள் பிரவேசிக்காமல், சுதந்திரமாக இருக்கும் வகையில் அந்த நிலைமையை மாற்றாமல், அதிலே தலையிடாமல் இருக்க வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த விஷயத்தில் திரு. விநாயகம் அவர்களுக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : உலகத்திலே மிக எழிலான கடற்கரை மெரினா கடற்கரை. அதை அழகுபடுத்துவதற்கு உதவித் தொகை இந்திய அரசிடம் இருந்து பெறப்பட்டதா ? அதைப்பற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. நா. காசிராமன் : மெரினா கடற்கரையை மேலும் அழகுபடுத்தும் திட்டம் ஒருபுறம் இருக்க, இருக்கின்ற அழகே கெடுகின்ற அளவுக்கு பலர் ஆக்கிரமித்துக்கொண்டு பலவிதமான நடவடிக்கைகளின் காரணமாக துர்நாற்றம் அதிகமாகி இருக்கிறது. அதைத் தவிர்த்து முன்பு இருந்த நிலைக்காவது கொண்டுவர அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். மெரினா கடற்கரையை அழகுபடுத்த வேண்டுமென்றால் அங்கிருக்கின்ற குடிசைகளை, ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவர்களை அகற்றுகிற நேரத்தில் அரசியல் கட்சிகள் தலையிடுகின்ற சூழ்நிலை இல்லாமல், அந்தக் காரியத்தைச் செய்யும் போது அரசியல் இலாபத்திற்காக எந்தக் கட்சியினுடைய மாநகராட்சி உறுப்பினரும் அதிலே தலையிடாமல் இருப்பார்களானால் அதை அடிப்படையாக வைத்து மெரினா கடற்கரையை அழகுபடுத்த இயலும். இதிலே எல்லாக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த அரசு கோருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தில் பம்பாயில் உள்ளதுபோன்ற அழகான மீன் காட்சி சாலை ஒன்றை ஏற்படுத்திக் கடலில் இருக்கும் அத்தனை வகை மீன்களும் காட்சி சாலையிலே இடம் பெற ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே அங்கு ஒரு மீன் காட்சி சாலை இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறினால் பரிசீலிக்கலாம்.

Clerks in Panchayat Development Department

* 301 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) whether certain departmental examinations have been prescribed for promotion to the post of Panchayat Development Clerks ;

(*b*) whether this rule has been ignored and promotions made on the basis of seniority alone, even though qualified persons are available, and

(*c*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம் ;

(இ) பேர்வைமுன் விவர அறிக்கை † ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) இவ்வினா எழவில்லை.

†756—758 பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.